# தேனி மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி)-ன் செயல்முறைகள்

## பிறப்பிப்பவர்: திரு.மீ.ஜாஹிர் உசேன்.,

ந.க.எண்: 36301/2018/ஊ.வ.1

நாள்: 20.09.2022

பொருள் : பணியமைப்பு - தேனி மாவட்டம் - ஊரக வளர்ச்சி அலகு - கருணை அடிப்படை பணிநியமனம் - சத்துணவுப் பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், தேனி - காமேஷ்வரன் (திரு) க. - - இளநிலை உதவியாளர் நிலையில் 31.08.2015 பி.ப. வரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை 1. தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.17776/2015/ஊ.வ.1, நாள்: 20.08.2015

2. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 02.03.2016.

3 தொடர்புடைய ஆவணங்கள்.

*****

**ஆணை:-**

தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகு, க.மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்) ஆகப் பணிபுரிந்து 02.04.2012 அன்று பணியிடைக் காலமான திரு.கே.கங்காதரன் என்பவரின் வாரிசுதாரர் திரு.க.காமேஷ்வரன் என்பவருக்கு கருணை அடிப்படையில் பார்வை (1)-ல் காணும் செயல்முறை ஆணையின்வழி க.மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, 31.08.2015 பிப முதல் பணியேற்பு செய்து, தற்போது தேனி மாவட்ட ஆட்சியரக சத்துணவுப் பிரிவில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

2) இந்நேர்வில் பார்வை (2)-ல் காணும் அரசாணையில் 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை விதித்தளர்வு தேவையில்லாத இனங்களுக்கு நியமன அலுவலரே வரன்முறை செய்திட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

***3) இதனடிப்படையில் திரு.க.காமேஷ்வரன், இளநிலை உதவியாளர், சத்துணவுப் பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், தேனி என்பவரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் 31.08.2015 பிற்பகல் முதல் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறை செய்து <u>ஆணையிடப்படுகிறது.</u>***

### நிபந்தனைகள்

1. இளநிலை உதவியாளர் பணியானது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உள்ளீட்டு எல்லைக்குள் வருவதால், 1954-ம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதி 16(பி)-ன் கீழ் தேர்வாணையத்தின் இசைவினை பெறப்பட்ட பின்னரே மேற்காணும் பணிவரன்முறை உறுதி செய்யப்பட்டதாக கருதி பின்னரே தகுதிகாண் பருவம் விளம்பப்படும்.

/True copy/

மாவட்ட ஆட்சித் தலைவரின்
நேர்முக உதவியாளர்
பு.த.எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்
தேனி மாவட்டம்

(கு.பி.யா)

2. தனியர் எவ்வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் உள்ளார் என்ற அடிப்படையில், 02.03.2016-ம் நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசாணை (நிலை) எண்.80-ல் குறிப்பிடப்பட்டுள்ள பத்தி 6.1-ன்படி தனியரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் வரன்முறை செய்யப்பட்டுள்ளது. விதி தளர்வு அல்லது விதி விலக்கு தேவையென அறியப்படும் / அறிவிக்கப்படும் நேர்வில் இவ்வாணை எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

மாவட்ட ஆட்சித்தலைவரின்
நேர்முக உதவியாளர் (வளர்ச்சி),
தேனி.

பெறுநர்:

திரு.க.காமேஷ்வரன்,
இளநிலை உதவியாளர்,
சத்துணவுப் பிரிவு,
மாவட்ட ஆட்சியரகம், தேனி.
தேனி மாவட்டம்.
(உரிய வழிமுறையாக)

நகல்:

1. ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை.
2. மாவட்ட ஆட்சித்தலைவரின் முகாம் அலுவலகம், தேனி.
3. மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு), தேனி.
4. "ஊ.வ.1" பிரிவு இருப்புக் கோப்பிற்கு

மாவட்ட ஆட்சியரகம்,
சத்துணவு திட்டம் பிரிவு,
தேனி.

ந.க.எண். 1663/2022/சை.வ.1, நாள். '09.2022

நகல் சார்பு செய்யப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவரின்
நேர்முக உதவியாளர் (சத்துணவு திட்டம்)
தேனி மாவட்டம்

பெறுநர்:
திரு.க.கமேஷ்வரன்,
இளநிலை உதவியாளர்,
பா.ஆ.த. [illegible] (ச.தி) அலுவலகம்,
தேனி.

True Copy

மாவட்ட ஆட்சித் தலைவரின்
நேர்முக உதவியாளர்
பு.த.எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்
தேனி மாவட்டம்